மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 33 — பலவகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,58,01,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

(உ) கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,48,91,000 under Demand No. 10—Administration of Justice."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஊ) கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 98,68,900 under Demand No. 5—Registration Department."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(எ) கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,32,66,400 under Demand No. 11—Jails."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

8. அரசினர் மசோதா

தமிழ் நாடு, 1969ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) மசோதா

THE HON. THIRU K. A MATHIALAGAN : Sir, I move for leave to introduce the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1969.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட் டிருக்கிறது.